**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
C 8064884

1. District : கிருஷ்ணகிரி மாவட்டம் PS: ல.ஒ.த.பி. கிரி காவல்நிலையம் Year: 2020 ஆண்டு FIR No.: 6/AC/2020 மு.த.அ. எண் Date: 05.09.2020 நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Sections பிரிவுகள்: 7(b)
   (ii) Act சட்டம்: Act 1988 as Amended Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: in 2018 Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 04.09.2020/17.00 மணிக்கு
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 04.09.2020 Time : நேரம் 14.00 மணி
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 04.09.2020 Time : நேரம் 14.00 மணி

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக இரகசிய தகவல்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 38 கி.மீ. தென் கிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தெ.வே. கிருஷ்ணராஜன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் வேமராயன்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 25.07.1972 (d) Nationality : நாட்டினம் இந்திய (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் (g) Address : முகவரி காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கிருஷ்ணகிரி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   B. நேதாஜி, உதவியாளர், சார்பதிவாளர் பொறுப்பு, சார்பதிவாளர் அலுவலகம் பர்கூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் ---

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed …………………… Rank …………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி …………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

(V. MANIVANNAN) Gr I 1379

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
5/9/20

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
5/9/20

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
04.09.2020. 16.00 மணி

Name: பெயர் ஜெ.வே. கிருஷ்ண ராஜன்
Rank: நிலை No. எண் காவல் [illegible]
[illegible]
திருத்தணி.

**கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு. எண்.6/AC/2020 u/s 7 (b) of the Prevention of Corruption act 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி**

நேற்று 04.09.2020 ஆம் தேதி நான் கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, அன்றைய தினம் பாரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரப்பதிவு நடைபெறும்போதும் அதற்குப் பின்பும் பதிவுதாரர்களிடமிருந்தும் மற்றும் பத்திர எழுத்தர்களிடமிருந்தும் பாரூர் சார்பதிவாளர் அவர்கள் அவருடைய பணியை செய்து கொடுத்தமைக்காக கையூட்டாக பணம் பெறப்போவதாக நம்பகமான தகவல் எனக்கு கிடைக்கப் பெற்றது. அதன் அடிப்படையில் அந்த அலுவலகத்தை திடீர் தணிக்கை செய்யும் பொருட்டு கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி மண்டல துணை வட்டாட்சியர் திரு கோ.மோகன் மற்றும் கிருஷ்ணகிரி வட்டம் பெரியமுத்தூர் வருவாய் உள்வட்ட ஆய்வாளர் திரு இரா.மணிகண்டன் ஆகியோர்களை அரசு சாட்சியாக இருக்கும் பொருட்டு அலுவலகத்திற்கு நேற்று மாலை வரவழைக்கப்பட்டது. அவர்களிடம் பாரூர் சார்பதிவாளர் அலுவலகத்தை திடீர் தணிக்கை செய்யப்போகும் விவரத்தை எடுத்துக் கூறி 16.00 மணிக்கு அரசு நான்கு சக்கர வாகனங்களில் நானும் அரசுசாட்சிகளும் மற்றும் காவலர்கள் குழுவினருடன் புறப்பட்டு நேற்று 04.09.2020 தேதி மாலை 17.00.மணி அளவில் பாரூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றடைந்தோம். அப்போது பாரூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளர் நிலையில் பொறுப்பு சார்ப்திவாளராக பணிபுரிந்து வரும் B.நேருஜி அவர்கள் ஒரு கருப்பு நிற பையை எடுத்துக்கொண்டு அந்த அலுவலகத்தில் இருந்து வெளியே வந்து இரு சக்கர வாகனத்தில் ஏற முற்பட்டார். அவரிடம் நானும் அரசு சாட்சிகளும் அறிமுகம் செய்து கொண்டு அவருடைய அலுவலகத்தை திடீர் தணிக்கை செய்வதற்காக வந்த விபரத்தை எடுத்துக் கூறி அவருடைய அலுவலகத்திற்கு வருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. அவ்வாறே அவரும் அந்த அலுவலகத்திற்குள் மத்திய அறையில் உள்ள அவருடைய இருக்கையில் வந்து அமர்ந்தார். அப்போது அந்த அலுவலகத்தில் தகவல் தொகுப்பு பணியாளர் திருமதி விமலா என்பவரும், அந்த அறையில் மேற்குப் பாகத்திலுள்ள அறையில் கேமரா ஆப்பரேட்டர் திரு P.விக்னேஸ்வரன் தனிநபர் திரு M.பெருமாள் துப்புரவு பணியாளர் திருமதி C.மகேஸ்வரி அலுவலக உதவியாளர் திருமதி M.விஜயா ஆகியவர்கள் பணி புரிந்து கொண்டிருந்தனர். தெர்மல் ஸ்கேனர் கொண்டு அந்த அலுவலகப் பணியாளர்களின் உடலின் வெப்பநிலை அறியப்பட்டது. அவர்களுடைய உடலின் வெப்பநிலை சீராக இருப்பது அறியப்பட்டது.

மேலும் அனைத்து பணியாளர்களும் முக கவசம் அணிந்து இருந்தனர் என்பதையும் உறுதி செய்து கொள்ளப்பட்டது. பொறுப்பு சார்பதிவாளர் திரு.நேருஜி அவர்களிடம் அலுவலக நிரந்தர முன்பணம் மற்றும் அரசு கணக்கில் உள்ள கையிருப்பு பணம் ஆகியவற்றை பற்றி கேட்க, அவர் அரசு பணப்பெட்டியில் இருந்து ரூ 250/-எடுத்து ஆஜர் செய்து அது அலுவலக நிரந்தர முன்பணம் என்று சொன்னார். மேலும் பத்திரப்பதிவின்போது பதிவுதாரர்களால் பல்வேறு தலைப்புகளின் கீழ் செலுத்தப்படும் தொகைகள் இணையதளம் மூலமாக செலுத்தப்படுவதால் அரசு கையிருப்பு பணம் எதுவும் நிலுவையில் இல்லை என்று தெரிவித்தார். பிறகு சந்தேகத்தின் அடிப்படையில் அவருடைய கருப்பு நிற பை முழுவதுமாக சோதனை இடப்பட்டது அதில் கைப்பற்றக் கூடிய தடயங்கள் எதுவும் அகப்படவில்லை. பின்பு அவரிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்கள் என்று கேட்க, அவர் ஆம் என்று சொல்லி அவருடைய வலதுபுற பேன்ட் பாக்கெட்டில் இருந்து 500/-ரூபாய் தாள்களை மடிப்புடன் ஆஜர் செய்து அதில் மொத்தம் ரூ 10,000/-இருப்பதாகவும் அது தனது சொந்த பணம் என்றும் தெரிவித்தார். அரசு சாட்சிகள் உதவியுடன் அந்த பணத்தை எண்ணிப் பார்க்கையில் அதில் 500 ரூபாய் தாள்கள் 27 எண்ணிக்கையில் மொத்தம் ரூ.13500/-இருந்தது அவர் வைத்திருந்த பணத்திற்கு அவரால் சரியாக கணக்கு சொல்ல இயலாமல் அதில் ரூ 10,000/-உள்ளதாக முன்னுக்குப்பின் முரணாக தெரிவித்தது சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் இருந்தது. பின்பு பொறுப்பு சார்பதிவாளர் திரு நேருஜி அவர்களை நான் மேலும் விசாரிக்க அன்றையதினம் ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டதற்காக பத்திர எழுத்தாளர்களிடமிருந்தும் பதிவுதாரர்களிடமிருந்தும் தான் கையூட்டாக 16500/-பெற்றதாகவும் அதில் ரூ.3000/- ஐ மற்ற பணியாளர்களுக்கு கொடுத்துவிட்டதாகவும், அது போக மீதி பணம்தான் இந்த ரூ.13500/-என தெரிவித்தார். அவர் அந்த பணத்தை கையூட்டாக கேட்டுப் பெற்றுக் கொண்டதாக தெரிவித்ததால் அந்த பணம் ரூ.13500/-ஐ வழக்கு நிமித்தம் என்னால் அப்போது தயார் செய்யப்பட்ட மகஜரில் கைப்பற்றப்பட்டது. பின்பு நேருஜி அவர்களிடம் வேறு பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அவர் அவருடைய இடது பேண்ட் பாக்கெட்டில் இருந்து ஒரு மணி பர்சை எடுத்து அதிலிருந்து ரூ.215/- ஐ எடுத்து ஆஜர் செய்து அது தனது சொந்தப் பணம் என்றும் கை செலவிற்காக வைத்துள்ளதாகவும் தெரிவித்தார். அவருடைய விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் அந்த பணம் ரூ 215/-அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. பின்னர் சந்தேகத்தின் அடிப்படையில் பொறுப்பு சார்பதிவாளர் நேருஜி அவர்களின் இருக்கை முழுவதும் சோதனை இடப்பட்டது. சோதனையில் கைப்பற்றப்படக்கூடிய தடயங்கள் எதுவும்

அகப்படவில்லை. பின்னர் பெண் காவலர்கள் உதவியுடன் தகவல் தொகுப்பு பணியாளர் திருமதி விமலா அவர்களை சந்தேகத்தின் அடிப்படையில் தனியறையில் வைத்து திரேக சோதனை செய்ததில் அவரிடம் எவ்வித தடயங்களும் அகப்படவில்லை. பிறகு சந்தேகத்தின் அடிப்படையில் அவருடைய சிமெண்ட் கலர் கைப்பையை சோதனை செய்து பார்க்கையில் அதில் பணம் ரூ 2033/-இருந்தது. அந்தப் பணத்தைப் பற்றி அவரிடம் நான் கேட்ட போது, அதில் ரூ.1033/-அவருடைய சொந்தப் பணம் என்றும் மீதி பணம் ரூ 1000/-இன்று மாலை பொறுப்பு சார்பதிவாளர் திரு.நேருஜி அவர்களால் தனக்கு கை செலவிற்காக கொடுக்கப்பட்டதாக தெரிவித்தார். இதுதொடர்பாக பொறுப்பு சார்பதிவாளர் திரு.நேருஜி அவர்களை விசாரிக்க, திருமதி விமலா அவர்களுக்கு ரூ.1000/- கொடுத்ததை ஒத்துக்கொண்டார். அது நேருஜி அவர்களால் பெறப்பட்ட கையூட்டு பணம் என்பதால் இரண்டு 500 ரூபாய் தாள்கள் அடங்கிய மொத்தம் ரூ.1000/-ஐ வழக்கின் நிமித்தம் என்னால் மகஜரில் கைப்பற்றப்பட்டது. பிறகு கேமரா ஆபரேட்டர் திரு விக்னேஸ்வரன் அவர்களிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று விசாரிக்க, அவர் ஆம் என்று சொல்லி அவருடைய வலது பேன்ட் பாக்கெட்டில் வைக்கப்பட்டிருந்த மணி பர்சில் இருந்து ரூ.1500/-ஆஜர்படுத்தி அதில் ரூ 1000/-தனது சொந்த பணம் என்றும் மீதி பணம் ரூ 500/-தனது கை செலவிற்காக பொறுப்பு சார்பதிவாளர் நேருஜி அவர்கள் தனக்கு கொடுத்தார் என்றும் தெரிவித்தார். அவருடைய சொந்தப் பணம் ரூ1000/- ஐ அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. ரூ 500/-பொறுத்தவரையில் திரு நேருஜி அவர்களால் பெறப்பட்ட கையூட்டு பணம் என்பதால் அந்த பணத்தை வழக்கின் நிமித்தம் மகஜரில் என்னால் கைப்பற்றப்பட்டது. பின்பு அவருக்கு அருகிலிருந்த திரு பெருமாள் என்பவரை விசாரிக்க, அவர் ஏற்கனவே இந்த அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து 2016 ஆம் வருடம் ஓய்வு பெற்று விட்டதாகவும் பொறுப்பு சார்பதிவாளர் நேருஜி அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு உதவியாக அலுவலக வேலைகளை செய்து தருவதாகவும் அதற்கு அவ்வப்போது தனக்கு கூலியாகப் பணம் கொடுப்பார் என்றும் தெரிவித்தார். அவரிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அவர் ஆம் என்று சொல்லி அவருடைய சட்டைப்பையில் இருந்து ரூ. 2060/-எடுத்து ஆஜர் செய்து அதில் ரூ.1060/-தனது சொந்தப் பணம் என்றும் மீதி பணம் ரூ.1000/- பொறுப்பு சார்பதிவாளர் நேருஜி அவர்களால் தனக்கு கூலியாக கொடுக்கப்பட்ட பணம் என்றும் தெரிவித்தார். இது தொடர்பாக நேருஜி அவர்களிடம் விசாரிக்க, அவரும் அதை ஒத்துக் கொண்டார். எனவே 500 ரூபாய் தாள்கள் 2 எண்ணிக்கையில் கொண்ட மொத்த பணம் ரூ.1000/-ஐ வழக்கு நிமித்தம் என்னால் அப்போது தயார் செய்யப்பட்ட

மகஜரில் கைப்பற்றப்பட்டது. ரூ.1060/-க்குண்டான அவருடைய விளக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்டு திரு பெருமாள் அவர்கள் வசமே திருப்பிக் கொடுக்கப்பட்டது. பின்னர் அலுவலக உதவியாளர் திருமதி விஜயா அவர்களிடம் ஏதாவது பணம் வைத்துள்ளீர்களா என்று கேட்க, அவர் ஆம் என்று சொல்லி அவர் வைத்திருருந்த ஒரு மஞ்சள் நிற பையில் இருந்து ரூ 600/-எடுத்து அதை செய்து அதில் ரூ.100/-தனது சொந்தப் பணம் என்றும் மீதி ரூ.500/-பொறுப்பு சார்பதிவாளர் நேருஜி அவர்களால் கை செலவிற்காக தனக்கு கொடுக்கப்பட்ட பணம் என்றும் தெரிவித்தார்.ரூ.100/-க்குண்டானஅவருடைய விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால் அந்த பணம் ரூ.100/-அவரிடமே திருப்பிக் கொடுக்கப்பட்டது. இது தொடர்பாக பொறுப்பு சார்பதிவாளர் நேருஜி அவர்களிடம் விசாரிக்க அவரும் ரூ 500/-ஐ அலுவலக உதவியாளர் திருமதி விஜயா அவர்களுக்கு கையூட்டு பணத்திலிருந்து கொடுத்ததை ஒத்துக்கொண்டார். எனவே அந்தப் பணம் ரூ 500/-வழக்கு நிமித்தம் அப்போது என்னால் தயார் செய்யப்பட்ட மகஜரில் கைப்பற்றப்பட்டது. பிறகு துப்புரவு பணியாளர் திருமதி மகேஸ்வரி அவர்களை விசாரிக்கையில் அவரிடம் எந்த பணமும் இல்லை என்று தெரிவித்தார்.பிறகு அந்த அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் "A" கணக்கு, "B" கணக்கு, B&D பதிவேடு, பிரிவு 41 கணக்கு, CD கணக்கு, உட்பிரிவு கணக்கு மற்றும் "D" கணக்கு ஆகியவற்றை பற்றி பொறுப்பு சார்பதிவாளர் நேருஜி அவர்களிடம் விசாரிக்க, அது தொடர்பான ஆவணங்களை அவர் கணினியிலிருந்து பிரதி எடுத்து என்னிடம் ஆஜர்படுத்தினார். அந்த ஆவணங்களில் அவரிடம் சான்றொப்பம் பெறப்பட்டு வழக்கு நிமித்தம் என்னால் மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும் அலுவலகப் பணியாளர்களின் வருகை பதிவேடு மற்றும் கணினி ஆபரேட்டர்களுக்கு உண்டான வருகைப்பதிவேடு ஆகியவை என்னால் பார்வையிடப்பட்டது. அந்த வருகை பதிவேடுகளில் சம்பந்தப்பட்ட பக்கங்கள் ஒளிநகல் எடுக்கப்பட்டு அதில் பொறுப்பு சார்பதிவாளர் நேருஜி அவர்களின் சான்றொப்பம் பெறப்பட்டு அந்த ஆவணங்கள் வழக்கு நிமித்தம் என்னால் அப்போது தயார் செய்யப்பட்ட மகஜரில் கைப்பற்றப்பட்டது. மேலும் பணியாளர்களின் தினசரி கையிருப்பு பதிவேடு பார்வையிடப்பட்டது. அந்த பதிவேடு 02.09.2020 வரையில் எழுதப்பட்டு இருந்தது. அதற்கு பின்பு அபதிவேடு பராமரிக்கப்படவில்லை. அந்த பதிவேட்டை பார்வையிட்டதற்கு அடையாளமாக நானும் அரசு சாட்சிகளும் சம்பந்தப்பட்ட பக்கங்களில் கைபாப்பம் செய்தோம். அந்த பக்கத்தை ஒளிநகல் எடுத்து பொறுப்பு சார்பதிவாளர் நேருஜி அவர்களிடம் சான்றொப்பம் பெறப்பட்டு என்னால் அப்போது தயார் செய்யப்பட்ட மகஜரில் இவ்வழக்கு நிமித்தம் கைப்பற்றப்பட்டது. அதன்பின்பு அலுவலகத்தில் பணியிலிருந்த கேமரா ஆபரேட்டர் விக்னேஸ்வரன்

அவர்களின் உதவியுடன் சார்பதிவாளர் அலுவலகத்தில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு கேமராவில் 04.09.2020ஆம் தேதி பதிவான கேமரா ஒளிப்பதிவு நிகழ்வுகளை ஒரு குறுந்தகட்டில் பதிவிறக்கம் செய்து அவரிடம் இந்திய சாட்சிய சட்டப்பிரிவு இன் 65B(4) கீழ் சான்று பெறப்பட்டது. அந்த சான்று மற்றும் 4169-81F1 என குறியீடு செய்யப்பட்ட ஒளிப்பதிவு பதிவிறக்கம் செய்யப்பட்ட குறுந்தகடு ஆகிவற்றை வழக்கு நிமித்தம் என்னால் அப்போது தயார் செய்யப்பட்ட மகஜரில் கைப்பற்றப்பட்டது. இந்த நிகழ்வின்போது அந்த அலுவலகத்தில் இருந்த திரு நேருஜி, வாடிக்கையாளர் திரு கிருஷ்ணமூர்த்தி, திரு பெருமாள், திரு விக்னேஷ்வரன், திருமதி விஜயா, திருமதி விமலா, திருமதி மகேஸ்வரி ஆகியோரிடம் அரசு சாட்சிகள் தனித்தனியாக அவர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தனர். இந்த திடீர் தணிக்கையின் போது சமூக இடைவெளி முறையாக கடைபிடிக்கப்பட்டது மேலும் அனைத்து பணியாளர்களும் திடீர் தணிக்கை அலுவலர்களும் முக கவசம் அணிந்து இருந்தார்கள் என்பதையும் உறுதி செய்து கொள்ளப்பட்டது. மேலும் இந்த திடீர் தணிக்கையின்போது அவ்வப்போது அனைத்து பணியாளர்களும் கிருமிநாசினி கொண்டு அவரவர் கைகளை சுத்தம் செய்து கொண்டார்கள் என்பதையும் உறுதி செய்து கொள்ளப்பட்டது. இந்த திடீர் தணிக்கை நிகழ்வு தொடர்பாக 04.09.2020ஆம் தேதி மாலை 18.30 மணி முதல் இரவு 21.00மணி வரையில் மடிக்கணினியில் என்னால் ஒரு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்யப்பட்டது. அதில் அரசு சாட்சிகள் பொறுப்பு சார்பதிவாளர் நேருஜி மற்றும் இதர பணியாளர்கள் கையொப்பங்கள் செய்தனர். மேலும் அந்த கைப்பற்றுதல் மகஜரின் நகல் ஒன்றை பொறுப்பு சார் பதிவாளர் திரு. நேருஜி அவர்களுக்கு இலவசமாக வழங்கி அந்த மகஜரில் கடைசிப் பக்கத்தில் அவருடைய ஒப்புதல் பெறப்பட்டது இந்த நிகழ்வின் போது கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ 16,500/-மற்றும் ஆவணங்களுடன் கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு 04.09.2020ஆம் தேதி இரவு 23.00 மணிக்கு வரப்பட்டது. மேற்கண்ட தகவலின் அடிப்படையில் இன்று 05.09.2020ம் தேதி பகல் 15.00 மணிக்கு கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு எண் 6/AC/2020 u/s 7(b) of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 ன் படி பாரூர் பொறுப்பு சார் பதிவாளர் திரு பி.நேருஜி அவர்கள் மீது வழக்குப்பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையை கிருஷ்ணகிரி மாவட்ட சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நடுவர் அவர்கள் நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

5/9/20

DSP
Krishnagiri VAC.